தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

# வில்லிபாரதப் பெண்மாந்தர்களின் குணநலன்கள்
## Characteristic Traits of the Women Characters from *Villibharatham*

**முனைவர் த.மகேஸ்வரி,** பதிப்பாசிரியர், தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**Dr. D. Maheswari**, Editor, International Journal of Tamil language and Literary Studies, IJTLLS,
Virudhunagar, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.7189910**

### Abstract

*Epics are an open source of human life and show the psychological traits of human beings. They serve as models of life and sustain an identity of national pride. They are national identities that evince the quality of the people. Tamil epics like "Silappathukaram", "Manimekalai", "Cheevaka Chintamani", "Valayapathi" and "Kundalakesi" are very famous and portray* moral ethics *through life. Western epics like "Gilgamesh", "Illiad', "Odyssey", "Aeneid", "Volsung Saga", "Nibelungenlid", Beowulf", "The Faerie Queen", "Paradise Lost", etc are famous epics of the world that show the national characters as archetypal models. India's epics "Ramayana" and "Mahabharatha" are in the same line. "Mahabharatha" is the longest epic of the world. It contains one lakh lines. It shows the national identity of Indianess. Woman is shown as the epitome of life in "Mahabharatha". Those who done wrong to woman will succumb to death is the main theme of "Mahabharatha". There are many versions of "Mahabharatha" in the regional spheres of India. Although there are many "Mahabharata" books, "Villibharatam" is the first book in Tamil literature that extols the glory of Bharat. The story of "Villibharatam" depicts the destruction of the evil Kauravas and the rise of Draupadi. The tendency to examine a person's character through traits is an ancient trait and has been evinced in the form of epics. The traits of the women characters of "Villibharatam" is determined by how they act in respect of their elders, the duties they perform, as chaste women, in the royal environment, and the state of salvation at the end of life. The purpose of this research paper is to study the nature of activities performed by the women of "Villibharatam" from in their life.*

**Keywords:** Epic, *Villibharatham*, Women Characters, Characteristic Traits.

### ஆய்வுச்சுருக்கம்

*காவியம் மனித வாழ்க்கைக்கு ஒரு நல்வழிகாட்டியாகும். மகாபாரத நூல்கள் பல இருப்பினும் தமிழ் இலக்கியத்தில் பாரதத்தின் பெருமையைப் போற்றும் முதல்நூல் வில்லிபாரதம் ஆகும். மேலும், கௌரவர்கள் அழிந்து தர்மம் திரௌபதிக்கு நிலை நாட்டப் பட்டதை எடுத்தியம்புகின்ற வில்லிபாரதக் கதைப் போற்றுதலுக்குரியது. முக்குணங்களைக் கொண்டு மனிதனின் குணத்தை ஆராயும் போக்கு ஓர் தொன்மைப்பண்பாகும். வில்லிபாரதத்தின் பெண்கள் பெரியோரைப் போற்றும் விதத்திலும், தங்கள் பதிக்குச் செய்யும் பணிவிடைகளிலும், சிறந்த கற்புக்கரசிகளாகத் திகழும் பண்பிலும், அரசாட்சி சூழலில்*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

*அவர்கள் செயல்படும் விதத்திலும், வாழ்நாளின் இறுதியில் மேற்கொள்ளும் முக்தி நிலையிலும் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதைவைத்து அவர்களின் குணநலன் நிர்ணயிக்கப்படுகிறது. வில்லிபாரதத்தின் பெண்கள் தங்களின் பிறப்பு முதல் இறப்பு வரை வெளிப்படுத்தும் செயல்பாடுகளால் எவ்விதக் குணத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதை ஆராய்வதே இவ்ஆய்வுக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாகும்.*

**கலைச்சொற்கள்:** காவியம், *வில்லிபாரதம்*, பெண்மாந்தர்கள், குணநலன்.

**முன்னுரை**

அரிதரிது மானிடராகப் பிறப்பது அரிது என்பது அவ்வையின் வாக்கு. மானிடராய் பிறந்து இம்மையில் முன்னோர்களின் தர்ம வழியைக் கடைபிடித்து மறுமையில் நன்மை அடைய வேண்டும் என்பதே இதன் விளக்கமாகும். இதனையே வேதங்களும் மறை பொருளாய் கூறுகின்றன. வேதங்களின் உட்பொருளை மானிடர் அனைவரும் அரிவது கடினம். ஏனென்றால், அவை சித்தாந்தங்களாகவும் தத்துவங்களாகவும் அமைந்துள்ளன. மனித வாழ்க்கையில் தோன்றக்கூடிய இன்ப துன்பங்கள், தவறான வழியில் செல்வதால் வரக்கூடிய இழப்புகள், துன்பங்களைச் சரிசெய்து வெற்றியடைவதற்கான தர்மவழிகள், மரணமில்லாப் பெருவாழ்வு மற்றும் இறைநிலை ஆகிய உயர்ந்த பண்புகளை நடைமுறை நிகழ்வுகள் மூலம் எடுத்துக் காட்டுவதினால் காவியங்கள் எக்காலத்திலும் புகழ்பெற்றுக் காட்சித்தருகின்றன. தமிழ் இலக்கியத்தில் பாரதத்தின் பெருமையைப் போற்றும் முதல் காவிய நூல் வில்லிபாரதம் ஆகும். மேலும், கௌரவர்கள் அழிந்து தர்மம் திரௌபதிக்கு நிலை நாட்டப்பட்டதை எடுத்தியம்புகின்ற வில்லிபாரதக் கதைப் போற்றுதலுக்குரியது. இச்சிறப்பிற்குரிய வில்லிபாரதத்தில் பெண்மாந்தர்களின் குணநலன்களை ஆராய்வதே இவ்ஆய்வுக்கட்டுரையின் முதன்மை ஆய்வு நோக்கமாகும்.

**மகாபாரதம்**

மாபெரும் காவியமான மகாபாரதம் 'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் இறுதியில் தருமம் வெல்லும்' என்ற நியதியைத் தெளிவுற உணர்த்துகின்றது. இக்காவியம் மனித வாழ்க்கைக்கு ஒரு நல்வழிகாட்டியாகும்.

> **தமிழ் இலக்கியத்தின் ஆரம்ப நாட்களில் பாண்டிய இராச்சியத்தின் தலைநகரான மதுரையில் அரச ஆதரவின் கீழ் தெற்கில் கடைசியாக மூன்று கல்விக்கூடங்கள் அல்லது சங்கங்கள் செழித்து வளர்ந்தபோது அத்தகைய ஒரு படைப்பு தோன்றியது என்று பாரம்பரியம் கூறுகிறது. மகாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் சங்கம் நிறுவப்பட்டதற்கானக் குறிப்பு உள்ளது என்று கருதப்படுகிறது. இந்தக் கருத்துக்குக்**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

**கல்வெட்டு ஆதாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பேனெஜிரிக் வரி 29 இல் உள்ளது. (தாம்சன், எம்.எஸ்.எச். "தமிழில் மகாபாரதம்." ஜர்னல் ஆஃப் தி ராயல் ஏசியாடிக் சொசைட்டி, பக். 115-123)**

**மாபெரும் இந்திய இதிகாசமான மகாபாரதம் ஒரு போரிலோ அல்லது ஒரு ராஜ்யத்திலோ வெற்றி பெற்ற மகிழ்ச்சியின் உச்சத்தையும், உயிர், உடைமை மற்றும் பல இழப்புகளின் துயரத்தின் ஆழத்தையும் கடந்து செல்ல நம்மைத் தூண்டுகிறது. கதாப்பாத்திரங்கள் மகத்தான உளவியல் மாற்றங்களைக் கொண்ட அவர்களின் துன்பகரமான மற்றும் குழப்பமான வாழ்க்கையின் முன்கணிப்பைக் காண்கின்றன. (தர்மபத ஜென. "மகாபாரதத்தை ஒரு அதிர்ச்சிக் கதையாகப் பேசுதல்." ஆங்கில மொழி மற்றும் இலக்கிய ஆய்வுகளின் ஐரோப்பிய இதழ், பக்.33-49)**

மகாபாரதம் மட்டுமல்ல பாரதம் பற்றிய நூல்கள் பல உள்ளன. அதன் வரிசையில் தமிழ்மொழியில் பாரதவெண்பா, மகாவிந்தம், பாரதசார வெண்பா, பாங்சாலி சபதம் என பலமொழிகளில் பல வகைகளில் மகாபாரத நூல்கள் உருவாக்கப்பட்டிருப்பினும் வில்லிபாரதமே மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**வில்லிபாரதம் - வில்லிபுத்தூரார்**

திருமுனைப்பாடி நாட்டின் சனியூரில் வைசுணவ சமயத்தில் அந்தணர் குலத்தில் வீரராகவாச்சாரியார் என்பவருக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு வில்லிபுத்தூரார் பிறந்திருந்த தை, தாரகாயன வண்டலைத் தண்டலைச் சனியூர் வீரராக வனருள்பெறு வில்லிபுத்தூரன் (வில்.சிற.,பா.17) என்னும் சிறப்புப்பாயிரப்பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன. வில்லிபுத்தூராரும் அருணகிரிநாதரும் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. காரணம் வில்லிபாரதமும், அருணகிரிநாதரின் திருப்புகழும் இரண்டாம் நூற்றாண்டு காலத்து நூல்களாக இருப்பதால் இருநூல்களின் ஆசிரியரும் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணப்படுகிறது. இவர்கள் காலத்திலேயே தமிழ் நாட்டில் வட மொழியும், கன்னட மொழியும் மற்றும் தெலுங்கு மொழியும் தமிழில் மிகுதியாக கலந்து இருந்துள்ளது. மேலும், தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கக் கூடிய அரசரோ, பிரபுக்களோ மிகுதியாக இல்லை. தமிழ்மொழி அழிந்து விடுமோ என்ற அச்சம் நிலவிய காலத்தில் தமிழ் அரசனான வரபதியாட்கொண்டான் வில்லிபுத்தூராரிடம் தம் இருவரின் புகழ் பூமியில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்படி வடமொழியில் வியாசமுனிவர் அருளிய மகாபாரதத்தைப் போன்று செந்தமிழில் இனிய செய்யுட்களைக் கொண்டு பாரதம் பாட வேண்டும் என்று வேண்டியுள்ளான். மன்னனின் வேண்டுதலுக்கு இணங்கி வில்லிபுத்தூராரும் சொற்சுவையும்,

E-ISSN: 2581-7140
Volume - 4, Special Issue - 2, June 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

பொருட்சுவையும் கூடி விளங்கும்படி சீரிய நடையில் வில்லிபாரதத்தைப் பாடியருளினார். இந்நிகழ்வினை மெய்ப்பிக்கும்படி வில்லிபுத்தூராருடைய திருமகனாரான வரந்தருவார்,

**நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே**
**வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்**
**ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்**
**கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ (வில்.தற்., பா.1)**

என்று வில்லிபாரத தற்சிறப்பப்பாயிரப் பாடல்வரிகளில் பாடியுள்ளார். வில்லிபுத்தூரரும் வரபதியாட்கொண்டானை வில்லிபாரதச் சிறப்பு கதாபாத்திரங்களான கன்னன், தருமன், அருச்சுனன் போன்றோர் வாயிலாகப் புகழ்ந்துப் பேசியுள்ளார். மேற்கண்ட வில்லிபாரத சிறப்புப்பாயிர மற்றும் தற்சிறப்புப்பாயிர செய்திகள் மூலமாக வில்லிபுத்தூரார் குறிப்புகளையும், வில்லிபாரதத்தை இயற்றிய காரணத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**வில்லிபாரதப் பருவங்கள்**

**1. ஆதி பருவம்**

| ஆதி பருவம் - 798 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| **1.** | குருகுலச் சருக்கம் | **147** |
| **2.** | சம்பவச் சருக்கம் | **119** |
| **3.** | வாராணவதச் சருக்கம் | **136** |
| **4.** | வேத்திரகீயச் சருக்கம் | **65** |
| **5.** | திரௌபதி மாலையிட்டச் சருக்கம் | **109** |
| **6.** | இந்திரப்பிரத்தச் சருக்கம் | **47** |
| **7.** | அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் | **90** |
| **8.** | காண்டவதகனச் சருக்கம் | **77** |

**2. சபா பருவம்**

| சபா பருவம் - 437 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | இராயசூயச் சருக்கம் | 153 |

E-ISSN: 2581-7140
Volume - 4, Special Issue - 2, June 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

| | | |
|---|---|---|
| 2. | சூதுபோர்ச் சருக்கம் | 284 |

**3. ஆரணிய பருவம்**

| ஆரணிய பருவம் - 723 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | அருச்சுனன் தவநிலைச் சருக்கம் | 176 |
| 2. | நிவாதகவசர் காலகேயர்வதைச் சருக்கம் | 161 |
| 3. | புட்பயாத்திரைச் சருக்கம் | 139 |
| 4. | சடாசுரன் வதைச் சருக்கம் | 26 |
| 5. | மணிமான் வதைச் சருக்கம் | 112 |
| 6. | துருவாசமுனிச் சருக்கம் | 17 |
| 7. | பழம்பொருந்து சருக்கம் | 23 |
| 8. | நச்சுப்பொய்கைச் சருக்கம் | 69 |

**4. விராட பருவம்**

| விராட பருவம் - 330 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | நாடுகரந்துறைச் சருக்கம் | 38 |
| 2. | மற்போர்ச் சருக்கம் | 14 |
| 3. | கீசகன் வதைச் சருக்கம் | 107 |
| 4. | நிரைமீட்சிச் சருக்கம் | 141 |
| 5. | வெளிப்பாட்டுச் சருக்கம் | 30 |

**5. உத்யோக பருவம்**

| உத்யோக பருவம் - 395 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | உலூகன் தூது சருக்கம் | 21 |
| 2. | வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம் | 20 |

E-ISSN: 2581-7140
Volume - 4, Special Issue - 2, June 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

| | | |
|---|---|---|
| 3. | சஞ்சயன் தூது சருக்கம் | 19 |
| 4. | கிருட்டிணன் தூது சருக்கம் | 264 |
| 5. | படையெழுச்சிச் சருக்கம் | 24 |
| 6. | முகூர்த்தவேள்விச் சருக்கம் | 5 |
| 7. | களப்பலியூட்டுச் சருக்கம் | 8 |
| 8. | அணிவகுப்புச் சருக்கம் | 34 |

**6. வீட்டும பருவம்**

| வீட்டும பருவம் - 377 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | முதற் போர்ச்சருக்கம் | 77 |
| 2. | இரண்டாம் போர்ச்சருக்கம் | 32 |
| 3. | மூன்றாம் போர்ச்சருக்கம் | 30 |
| 4. | நான்காம் போர்ச்சருக்கம் | 42 |
| 5. | ஐந்தாம் போர்ச்சருக்கம் | 25 |
| 6. | ஆறாம் போர்ச்சருக்கம் | 28 |
| 7. | ஏழாம் போர்ச்சருக்கம் | 10 |
| 8. | எட்டாம் போர்ச்சருக்கம் | 39 |
| 9. | ஒன்பதாம் போர்ச்சருக்கம் | 41 |
| 10. | பத்தாம் போர்ச்சருக்கம் | 31 |

**7. துரோண பருவம்**

| துரோண பருவம் - 667 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | பதினோராம் போர்ச்சருக்கம் | 45 |
| 2. | பன்னிரண்டாம் போர்ச்சருக்கம் | 93 |
| 3. | பதின்மூன்றாம் போர்ச்சருக்கம் | 259 |
| 4. | பதினான்காம் போர்ச்சருக்கம் | 220 |
| 5. | பதினைந்தாம் போர்ச்சருக்கம் | 50 |

E-ISSN: 2581-7140
Volume - 4, Special Issue - 2, June 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**8. கன்ன பருவம்**

| கன்ன பருவம் - 360 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | பதினாறாம் போர்ச்சருக்கம் | 91 |
| 2. | பதினேழாம் போர்ச்சருக்கம் | 269 |

**9. சல்லிய பருவம்**

| சல்லிய பருவம் - 204 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | பதினெட்டாம் போர்ச்சருக்கம் | 204 |

**10. சௌப்திக பருவம்**

| சௌப்திக பருவம் - 46 பாடல்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **சருக்கங்கள்** | **பாடல்கள்** |
| 1. | பதினெட்டாம் போர்ச்சருக்கம் | 46 |

மேற்கண்ட பத்துப் பருவங்களையும் எழுதிய வில்லிபுத்தூரார் அசுவத்தாமனின் அவலநிலை, பாண்டவர்களின் இறப்பு, கிருட்டிணனின் மறைவு ஆகியவற்றை விளக்கிப் பாடிட விரும்பாத காரணத்தினால் பின் ஏனைய பருவங்களைப் பாடாமல் வில்லிபாரதத்தை முடித்துள்ளார் எனும் செய்தி நிலவிவருகிறது.

**வில்லிபாரதத்தில் பெண் கதைமாந்தர்கள்**

அசோதை, அம்பாலிகை, அம்பிகை, அம்பை, இடிம்பை, இராதை, உத்தரை, உருப்பசி, உலூபி, கங்கையாள், காந்தாரி, காலகை, கிருபி, குந்தி, சரை, சன்மிட்டை, சித்திராங்கதை, சுதேட்டிணை, சுபத்திரை, திரௌபதி, துச்சளை, தேவயாணை, நளாயணி, பன்னவாதை, மாத்திரி, யோசனகந்தி போன்ற வில்லிபாரதப் பெண்மாந்தர்களின் குணநலன்கள் சத்துவம், இராசம், தாமசமான முக்குணங்களின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

**குணநலன்கள்**

குணம் ஒருவரின் அகம், புறம் சார்ந்த எண்ணங்களின் வெளிப்பாடாகும். ஒருவனின் குணத்தை அறிய அவன் எவ்வாறான உணவை உட்கொள்கிறானோ, எவ்வாறான வழிபாடு மற்றும் தியாகம் செய்கிறானோ, எந்நிலை ஒருவனுக்கு ஆனந்தத்தைத் தருகிறதோ அதை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

பொறுத்தும் ஒருவனின் குணத்தை அறிய முடியும். குணம் மற்றும் அதன் வகைப் பற்றி காணும்பொழுது;

> **குணம் ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்தவம், சையோகம், விபாகம், பரத்வம், அபரத்வம், குருத்வம், திரவத்வம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேசம், பிரயத்னம், தருமம், அதருமம், சமசுகாரம் (24) வகைப்படும் என்றும், சத்துவம் ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி அடக்கல் முதலியவாம். இராசதம் மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி முதலியவாம். தாமதம் பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை முதலியவாம் என்றும் கூறுகிறது. (அபி. சிந்., ப.564)**

என்று அபிதான சிந்தாமணி குணத்தின் தன்மை, வகை மற்றும் சத்துவம், இராசதம், தாமசக் குணங்களின் படிநிலைகளையும் கூறியுள்ளதைக் காணமுடிகின்றது. இதுபோன்று பல அகராதிகளும் முக்குணங்களுக்கு விளக்கம் கொடுத்திருக்கின்றன.

**சத்துவம், இராசதம், தாமசம் குணங்கள்**

மனிதர்கள் அனைவரும் முக்குணத்தின் கட்டுப்பாட்டினுள்ளேயே வாழ்கின்றனர். மனிதனின் இயற்கை தன்மைக்கும், அவனது குணநலத்திற்கும் முக்கிய ஆதாரமாய் விளங்குவது முக்குணங்களேயாகும். முக்குணங்களுள் முதன்மையானது சத்துவமாகும். சத்துவக் குணம் நன்மை, தெளிவு, காந்தி (ஈர்ப்பு), சீர்நிலை, நிகழ்காலம் மற்றும் சுத்த நிலையை வெளிப்படுத்துவதாய் உள்ளது. அதை 'சத்' என்று வேதங்கள் கூறுகின்றன. சத்துவம் - சுபாவம், குணம், சாரம், வலி, சாத்வீகம், நன்மைத்தன்மை (த.இ.அ., ப.118) என்று தமிழ் இலக்கிய அகராதி பொருள் கூறுகிறது. சத்துவக் குணமானது அப்பழுக்கு அற்றதாகவும், உள் ஒளியுடையதாகவும், இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டு நித்திய சுதந்திரத்தில் இருப்பதுவாம் (ப.கீ., ப.607) என்று பகவத்கீதை பகர்கிறது. சமுதாய நோக்கில் சத்துவக் குணமானது மதத்தின் தொடர்புடையதாகவே உள்ளது. மதத்தின் மூலமாக உள் ஒளி பெற்று ஒத்திசைவு அடைவது சத்துவக் குணாதிசயம் எனக் கருதப்படுகிறது.

இராசதக் குணமானது இக்குணங்களுள் மத்திம தன்மையுடையது. இராசதக் குணம் என்பதற்கு 'அரசநீதி' (த.இ.அக., ப.221) என்று தமிழ் இலக்கிய அகராதி பகர்கிறது. அரச குடும்ப பெண்மாந்தர்கள் அனைவரும் இராசதக் குணப்பண்புகளைக் கொண்டு திகழ்கின்றனர். முக்குணங்களின் உந்துதலினாலேயே மனிதன் தனது செயல்கள் யாவையும் செயல்படுத்துகிறான். அவன் பெரும்பான்மையான தருணங்களில் முக்குணத்தின் இறுதி நிலையிலுள்ள தாமசக் குணத்தின் சாரத்திலேயே நீண்டு செயல்படுகிறான். இது குணங்களில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

கீழ்மையானத் தன்மையுடையதாகும். பெரும்பான்மையாக இக்குணப் பண்பு சுயநலத்தையே காட்டும் விதமாய் அமைகிறது. இயற்கை நிலைகளான இருள், மந்த வானிலை, பலத்த மற்றும் சாதாரண மழை போன்ற சூழல்கள் தாமசக் குணத்தை உருவாக்குகின்றன. மழைக் காலங்களில் மனதில் சாதாரணமாக உருவாகும் வெறுப்புணர்ச்சியே மனிதனில் தாமசக் குணம் இருப்பதற்கு அடிப்படை நிலையாகும். வில்லிபாரதத்தில் பெண் மாந்தர்கள் எவ்விதம் தங்கள் குணங்களால் மாறுபட்டு திகழ்கின்றனர் என்பதையும் ஆராயும் விதத்தில் கட்டுரை அமைந்துள்ளது.

**வில்லிபாரதப் பெண்மாந்தர்களின் குணநலன்கள்**

**அசோதை**

அசோதை கிருட்டிணனின் வளர்ப்புத்தாய். கிருட்டிணன் கம்சனது சிறையில் பிறந்த பொழுது கம்சன் கையால் கொலைச் செய்யப்படாமல் இருப்பதற்காக வசுதேவன் தெய்வ அருளால் சிறை மீண்டு காட்டாறு கடந்து அசோதையிடம் தன் மகனைப் பாதுகாப்பாக வளர்க்குமாறு சேர்த்திட்டார். அசோதை கிருட்டிணனைத் தன் மகவுபோல் எண்ணி அன்பை ஊற்றி வளர்த்தாள். அவள் வளர்ப்பு அன்னையாக இருக்காமல் கிருட்டிணனின் தாயாகவே திகழ்ந்தாள். அவன் சிறந்த வீரனாகவும், தத்துவ ஞானியாகவும், நியாய தர்மங்கள் அறிந்தவனாகவும் வளர்ந்து மேன்மைப் பெற்று இருந்தமைக்கு அசோதையின் வளர்ப்பு ஓர் காரணமாகும். சிறந்த புத்திரர்களைப் பெற்றெடுப்பதற்கு அக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள் கூட தவமுனிகளை நாடி இருந்திருக்கின்றனர். அதுமட்டுமன்று சிலசமயங்களில் நல்ல நிலைகளில் இருந்தோரும் தம் பிள்ளைகள் தீயவழிகளில் சென்று மாண்டதையே கண்டிருக்கின்றனர். ஆனால் அசோதை வளர்ப்பிற்காகக் கொடுக்கப்பட்ட கிருட்டிணனைச் சிறந்த மனிதனாக்கி தெய்வீக அருள் நிறைந்தவனாக உருவாக்கியிருக்கிறாள். இச்செயல் அசோதைக்குச் சத்துவப்பண்பு அமைந்ததினால் நிகழ்ந்ததாகும்.

**அம்பை, அம்பிகை, அம்பாலிகை**

அம்பை, அம்பிகை, அம்பாலிகை இம்மூவரும் காசிராசன் மகள்கள். இம்மூன்று பெண்களையும் வீடுமன் தனது தமையனான விசித்திரவீரியனுக்கு மணமுடித்து வைக்க ஆயத்தமானார். அதில் அம்பை சாலுவனை நேசித்த விதம் அறிந்து அவளை விட்டு விட்டு மற்ற இரு பெண்களையும் விசித்திரவீரியனுக்கு மணமுடித்து வைக்கிறார். காசி அரசனின் மகளான அம்பை, வீடுமன் தனது தம்பிக்காகத் தன்னைக் கவர்ந்து பின் கைவிட சாலுவனிடம் செல்கிறாள். அவன் பிறர் கவர்ந்த உன்னைத் தீண்டலாகாது என்று கூறி மறுக்க, அம்பை வீடுமனிடம் தாங்கள் தன்னை மணமுடித்து கொள்ளுமாறு வேண்டுகிறாள். வீடுமன் தன் விரதம் பங்கப்படும் என்று மறுத்துவிட, அம்பை அவரைப் பழிவாங்க எண்ணி, பரசுராமனை அணுகுகிறாள். அச்செயலும் தோல்வியடைய உயிர் துறந்து மறுபிறவியில் சிகண்டியாய்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

வீடுமன் இறப்பிற்குக் காரணமாக அமைகிறாள். அம்பிகை, அம்பாலிகை இருவரும் அரச குடும்பத்தில் பிறந்து, மற்றோர் அரசனையே திருமணம் முடித்ததாலும், அம்பை சாலுவனாலும், வீடுமனாலும் கைவிடப்பட பழிவாங்கும் உணர்ச்சிக் கொண்டு செயல்பட்டதாலும் இவர்கள் மூவரும் முறையே இராசதக் குணம் உடையவர்களாகின்றனர்.

**இடிம்பை**

இடிம்பன் எனும் கொடிய அரக்கனின் தங்கை இடிம்பை. வெவ்விய அக்கினியின் சுவாலைக்குச் சமமான செம்பட்டை மயிரையுடையவள். நரமாமிசம் உண்ணக் கூடியவள். வனத்தில் வீசும் மனித சரீர வாசனையை அறிந்து அவர்களைக் கவர்ந்து வர சொன்ன தனது அண்ணனின் கட்டளைப்படி வனத்திற்குள் சென்ற இடிம்பை, வீமனைக் கண்டாள். வீமனைக் கண்டவுடன் கோபத்துடனே கொன்று தின்ன வந்த கொடுந்தொழிலையுடைய அறிவில்லாதவளாகிய இடிம்பை காமமோகம் கொண்டு சொல்லமுடியாமல் மனம் நாணி நின்ற நிலையினைக் **கொம்மைவெம் முலைத்தெரிவையர்க் குளங்கூசு மாசைநோய் கூறுகிற்பதென (வில். ஆதி. வேத்., பா.5)** என்று ஆதிபருவ வேத்திரகீயச் சருக்கப்பாடல் வரியும், இடிம்பை தன் மோகத்தினை வீமனிடம் வெளிப்படுத்திய விதத்தினை;

**சினத்துடன்கொன்றுதின்றிடப்போதருந்தொழிற்பேதைநான்மெலிந்து**
**இருஞ்சிறைச்சுரும்பிசைகொண்மாலையின்பாமாலுழந்துன்னை யெய்தினேன்**
**(வில். ஆதி. வேத்., பா.6)**

என்று ஆதிபருவ வேத்திரகீயச் சருக்கப்பாடல் வரிகளும் எடுத்துரைக்கின்றன. இடிம்பையின் செயலைக் கண்டு இடிம்பன் கோபம் கொள்கிறான். வீமன், இடிம்பனை வென்ற பின் இடிம்பையை மணக்கிறான். இவள் கடோற்கசனைப் பெற்றெடுக்கிறாள். இடிம்பை நரமாமிசம் உண்ணக் கூடிய அரக்கி என்பதாலும், வீமனைக் கண்டு மோகம் கொண்டதனாலும் தாமசக் குணமுடையவளாகிறாள்.

**இராதை**

இராதை அத்தினாபுரத்து அரச தேரோட்டியான அதிரதனின் மனைவி. சூடகம் அணிந்த கையாகிய தாமரை மலரையுடைய இராதை கணவனுடன் நதியோரத்தில் நின்று கொண்டிருந்த பொழுது நீரின்மேல் மிதந்து வந்த பெரிய பெட்டியில் இரத்தினங்களுடன் குந்திதேவியால் அனுப்பப்பட்ட குழந்தையைக் கண்டு பிள்ளைப்பேறு இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த அவர்கள் குழந்தையைக் கையில் எடுத்து ஆனந்தமடைந்தனர். இராதையோ உள்ளத்தளவில் பேரானந்தம் பொருந்தியவளாய், அப்பிள்ளையை எடுத்து வளர்ப்போம் என்று அதிரதனிடம் முறையிட்டாள். இச்செயல் அவள் தாய்மை முழுமைப் பெற்றதாக உணர்த்துகிறது. சத்துவக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

குணத்தில் சிறந்ததோர் பண்பு அன்பு. இராதை குழந்தையின் மீது வைத்தத் தாயன்பினை வைத்து அவளிடம் சத்துவக் குணத்தின் பண்பு நிரம்பப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

**உத்தரை**

மச்சதேசத்து அரசனான விராடனின் மகள் என்பதனாலும், அபிமன்யுவின் மனைவியானதனாலும் உத்தரை இராசதக்குணம் பொருந்தியவளாகவே கருதப்படுகிறாள்.

**உருப்பசி**

உருப்பசி திருமாலிடத்து தோன்றிய தேவகுலத்துப் பெண். சிறந்த அரசனான ஆயுவின் தாயாவாள். இக்காரணங்களினால் உருப்பசி இராசதக் குணம் உடையவளாகிறாள்.

**உலூபி**

நாககன்னிகை என்பதனாலும், அருச்சுனனை மணமுடித்ததனாலும் இராசதக்குணம் கொண்டவளாகக் காணப்படுகிறாள்.

**கங்கையாள்**

கங்கையாள் தேவலோகத்தில் இருந்து சாபவிமோசனம் பெறுவதற்காகப் பூலோகத்திற்கு வந்த தேவலோகப் பெண். அதே சமயத்தில் வசுக்கள் சாபம் பெற்று பூலோகத்திற்குச் சாபத்தைத் தீர்த்துக் கொள்ள வந்தனர். இதை அறிந்த கங்கை அவர்களுக்கு சாப விமோசனம் தர விரும்பி தான் அவர்களைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்துச் சாபம் தீர்ப்பேன் என்று வாக்களித்தாள். பூலோகத்திற்கு வந்த கங்கையாளின் அழகைக் கண்டு சாந்தனு மயங்கினான். அவளிடம் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினான். சாந்தனுவை சில நிபந்தனைகளுடன் திருமணம் செய்து கொண்டு வசுக்களைக் குழந்தைகளாகப் பெற்றெடுத்துச் சாப விமோசனம் அளிக்கும் புனித கங்கை நீரில் வீசியெறிந்து அவர்களுக்குச் சாப விமோசனம் அளித்தாள். பின்பு கடைசி பிள்ளையை எறிவதற்கு முன்னர் சாந்தனு அரசாளுவதற்காகக் குழந்தை வேண்டும் என்று தடுத்தான்.

**முக்குலத்தரசினு முதன்மையாலுயர்**
**இக்குலத்திவனலா தில்லைமாமகார்**
**அக்குலத்தவமுனி யருளினாலிவன்**
**மெய்க்குலத்தந்தையாம் விழைவுமில்லென்றாள் (வில். ஆதி. குரு., பா.75)**

என்ற குருகுலச் சருக்கப்பாடல் வரிகள் மூலமாகக் காமதேனுவைக் கவர்ந்த பிரபாசனென்ற வசுவைப் பெண்ணின்பம் அற்றிருக்கும்படி வசிட்டமுனிவன் சபித்தானாதலால் தந்தையாம் விழைவும் குலத்தவமுனியருளினால் இவனுக்கு இல் என்று முற்பிறப்பு வரலாற்றைக் கூறி வீடுமனாய் பிரம்மசரிய விரதம் பூண்டவனாய் வாழ்வான் என்று பிரபாச வசுவின் சாபத்தைப்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

போக்க நினைக்கும் கங்கையாள், அவனின் வாழ்வை சாந்தனுவிடம் எடுத்துரைப்பதை அறிய முடிகிறது.

கங்கையாள் தான் சாபமுற்று அதிலிருந்து மீள நினைக்கும் நேரத்திலும் வசுக்களின் சாபம் நீக்க வேண்டும் என்ற எண்ணம் அவளின் நல் உள்ளத்தைக் காட்டுகிறது. வசுக்களின் சாபம் நீக்க வேண்டும் என்பதற்காக தான் பெற்றெடுத்தக் குழந்தையைக் கங்கை நீரில் போடும் போது அவளின் வைராக்கியத்தையும், வசுக்களின் எதிர்கால நலனை மட்டும் அச்சமயம் கருத்தில் கொண்டு செயல்பட்டமையையும் ஆராயும் போது கங்கையாளின் சத்துவக் குணநலன் மிளிர்நடைப் போடுகிறது.

**காந்தாரி**

காந்தார தேசத்துத் தலைவனான சுபலனின் மகள் காந்தாரி. கௌரவர்களுக்குத் தாய். காந்தார தேசத்துப் பெண்ணான காந்தாரி திருதராட்டிரனைத் திருமணம் செய்தது, கணவனின் நிலை உணர்ந்து இமைக்கும் தன்மையுள்ள தன் இரண்டு கண்களை மலரவிழித்து யாதொருவரையும் பாரேன் என்று தனது கண்ணைக் கட்டிக் கொண்டதை,

**இமைத்தகண்ணிணைமலர்ந்தினி நோக்கலேன்யானொருவரையென்று**
**சமைத்தபட்டமொன்றினிற்பொதிபெதும்பைத்தந்தையுந்தனயொரும்**

**(வில். ஆதி. சம்., பா.24)**

எடுத்துக்காட்டும் ஆதிபருவ சம்பவசருக்கப் பாடல் வரிகள் சான்றாகின்றன.

> **காந்தாரி திரிதிராஷ்டிரனுக்காகக் கண்களைக் காட்டிக்கொள்வது என்பது ஒரு மனைவியின் தர்மத்தை நிறைவேற்றுவதாகும். இது தனது கணவனை நோயிலும் ஆரோக்கியத்திலும் பின்பற்றுவதாகும். தான் விதைக்கும் தியாகத்தின் விதைகள், பின்னர் துரியோதனனின் உடலைப் பலப்படுத்த தான் பெற்ற சக்திகளைப் பயன்படுத்தினால், அது பலனைத் தரும் என்று விரதத்தைத் தொடர்ந்தார். இது ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் சிறந்த மன வலிமையையும் தனிப்பட்ட தியாக உணர்வையும் வெளிப்படுத்துகிறது என்கிறார் ஹெலன் செடர்மேன்.**
> **(https://clcpluggedin.wordpress.com/2020/04/24/)**

> **காந்தாரி தனது கணவரின் குருட்டுத்தன்மையை முன்மாதிரியாகக் கொண்டு தனது கண்களை நிரந்தரமாக மூடுவது என்பது மற்றொருவரின் நலன்களுக்குச் சமர்ப்பணம் ஆகும் என நம்பினாள் சைதாலி வாத்வா கூறுகிறார்.**
> **(https://clcpluggedin.wordpress.com/2020/04/24/)**

இந்து சமூகத்தில் உள்ள பல்வேறு பெண்களின் மரியாதை மற்றும் பணிந்த தன்மையை இது தெளிவாகக் எடுத்து காட்டுகிறது. காந்தாரி, இளவரசி என்ற புகழைப் பெற்றிருந்தாலும், தன் கணவரிடம் அன்பும் அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு சிறந்த அடையாளத்தைக் காட்டுகிறாள்

E-ISSN: 2581-7140
Volume - 4, Special Issue - 2, June 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

என்று ஹெலன் செடர்மேன், சைதாலி வாத்வா என்ற இவ்விண்ரடு அறிஞர்களும் பெருமைப்படப் பேசுகிறார்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

சூதுபோர்ச் சருக்கத்தின் போது பாண்டவர்கள் அத்தினாபுரத்திற்கு வந்த பொழுது தமக்கு தாய் முறையான மற்றும் சிறந்த பதிவிரதையான காந்தாரியை வணங்கினர். அவளும் தனது மகன்களுக்கு ஜென்ம விரோதிகளாக விளங்கும் மிகச்சிறந்த பாண்டவர்களை அன்போடு வாழ்த்தினாள். காந்தாரி திருதராட்டிரனுக்காகப் பொற்பட்டால் கண்ணைக் கட்டிக் கொண்டதும், பாண்டவர்களைத் தம் மக்களென முறையாகக் கருதி தாயாய் வாழ்த்தி அருளியமையும் அவளின் சத்துவப் பண்பைக் குறிக்கின்றன.

**காலகை**

காலகை அரக்கர்களான காலகேயர்களுக்குத் தாய். வஞ்சகுணம் உடையவள். இச்செய்தியை மட்டும் வைத்து அவள் தாமதக் குணம் உடையவள் எனலாம்.

**கிரிகை**

கிரிகை சேதி மரபினைச் சேர்ந்தவள். வசுவின் மனைவி. வசிட்டமுனிவனது காமதேனுவைக் கவர்ந்து வரும் படி தனது கணவனுக்குக் கூறுகிறாள். வசு காமதேனுவைக் கவர்ந்த வசிட்டமுனிவரது சாபத்தைப் பெற்றது கிரிகையின் தீய எண்ணத்தால் நிகழ்ந்ததாகும். அதனால் கிரிகை தாமதக் குணமுடையவளாகக் கருதப்படுகிறாள்.

**கிருபி**

கோதமனின் பேரனாகிய கிருபனின் தங்கை கிருபி. இளம் வயதில் மிகுந்த அழகுடைய பெண்ணாகத் திகழ்ந்த கிருபி, துரோண முனிவனின் மனைவியான நிலையும், சிவபிரானது அருளால் பகை கடலை வற்றச் செய்யும் கந்தக் கடவுளுக்கு ஒப்பான பெரும் வீரனான அசுவத்தாமனைப் பெற்றெடுத்து சிறந்த தாய்மை நிலையையும் அடைந்தமைக் கிருபியின் சத்துவப் பண்பின் தன்மையைக் காட்டுகின்றன.

**குந்திதேவி**

குந்திதேவி யதுகுல சூரனின் மகள். பிருதை என்பது குந்தியின் இயற்பெயராகும். வசுதேவரின் உடன்பிறப்பு. கிருட்டிணனுக்கு அத்தை. பாண்டுவின் மனைவி. கன்னன் மற்றும் பாண்டவர்களுக்குத் தாய். மேலும், குந்தி ஈகை, அன்பு, தியாகம் போன்ற நற்குணமுடையவள். கிருட்டிணன் தூது சருக்கத்தில் குந்தியைக் கிருட்டிணன் சந்தித்த பொழுது வனவாசஞ் சென்ற தன் புத்திரரைப் பார்த்தவள் போல் மகிழ்ச்சி அடைந்தாள். போர் செய்யும் சூழல் எழுந்துள்ளதைக் கிருட்டிணன் குந்திக்குக் கூறியருள் செய்ய அவள் வருத்தமடைகிறாள். அச்சமயம் குந்தியிடம் கிருட்டிணன் கன்னனின் பிறப்பின் வரலாற்றைக் கூறி, பாண்டவர்கள் வெற்றிப் பெற, நீ கன்னனிடம் நாகாசுத்திரத்தை அருச்சுனனுக்கு எதிராக ஒரு தடவைக்கு மேல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

பயன்படுத்தக் கூடாது என்றும், மற்ற நால்வர் மீது பகை பாராட்டக் கூடாது என்றும் வரம் பெற்று வரச் சொன்னான். குந்தியும் கன்னனிடம் சென்று, உன் தாய் நான் தான் என்று கூற கிருட்டிணனின் சூழ்ச்சி என்று கருதி கன்னன் மறுத்திட்டான். பல தாய்மார்கள் செல்வம் பறிக்கப் பொய் கூறியதை நினைத்து வெதும்பினான். மேலும், அவளிடம் தேவர்கள் அளித்த ஆடையை அணிந்து உண்மையைக் கூறுங்கள், நீங்கள் உண்மையான தாயாக இருந்தால் உயிர் பிரியாது இல்லையெனில் மரண வேதனையில் உயிர் பிரிந்து விடும் என்று கூறினான். குந்திதேவி ஆடையை அணிந்து உண்மையான தாய் என்று நிரூபிக்க, கன்னன் பாச வெள்ளத்தில் மூழ்கிப் போனான். பின்னர் குந்தி, கன்னனிடம் பாண்டவர்கள் உன் தம்பிமார்கள் போர் வேண்டாம் என்று கூறியும் அவன் கேட்கவில்லை. பின்பு கிருட்டிணன் கூறிய இரண்டு வரங்களைக் குந்திதேவி கேட்ட விதத்தினை,

**பார்த்தன்வெஞ் சமரினின்னுடன் மலைந்தாற்பகைப் பெரும்பாந்தளம்பகழி**
**கோத்தலும் பிழைத்தான் மறித்துநீவிடுத்துக் கோறலென்றொரு வரங்குறித்தாள்**
**வாய்த்தமற்றவர்களிளைஞரென்றவரை மலையலென்றொரு வரங்குறித்தாண்**

**(வில். உத். கிரு., பா.258)**

எனும் உத்யோகப்பருவ கிருட்டிணன் தூது சருக்கப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. குந்திதேவி கேட்ட வரங்களைக் கன்னன் கொடுத்து, தான் பாரதப் போரில் அருச்சுனனால் இறக்க நேரிடலாம் என்று கூறினான். அவ்வாறு நேரிட்டால் அரசர்கள் அனைவரும் அறியும் படி உம்முடைய புத்திரன் நான் என்று கூற வேண்டும். பாரதப்போர் நடைபெறும் வரை பாண்டவர்கள் ஐவருக்கும் நான் தான் உனது புத்திரன் என்பதும் தெரியக்கூடாது என்று கன்னன் கேட்க குந்திதேவியும் சரி என்று கூறிவிட்டு பாசப் போராட்டத்தில் திளைத்ததை அறிய முடிகிறது. வில்லிபாரதத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை மேன்மையுடைய பெண்ணாகவே குந்தி காட்டப்பட்டிருக்கிறாள். ஒவ்வொரு நிலையிலும் சீரான சிந்தை உடையவளாயும் திகழ்ந்திருக்கிறாள். பாண்டு துறவறம் சென்ற பின்பிருந்து குந்தியும் நகர்புறத்தில் இருந்து கொண்டே துறவற வாழ்வை மேற்கொண்டிருக்கின்றாள். தம் மக்கள் மீது தீராத அன்பு கொண்டவள். அதே போன்று பாண்டவர்களின் சகாயனும் தமது மருமகனுமான கிருட்டிணன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தவள் குந்தி. மேற்காணும் செய்திகளைக் கொண்டு ஆராயும் போது குந்தி பெருமளவிற்குச் சத்துவக் குணங்களின் சொரூபமாகவே காட்சிப்படுத்தப் பட்டுள்ளாள் என்பதை அறிய முடிகின்றது.

### சரை

சரை தருமம் உணராமனத்தினள். புலாலுண்பவள். மகத குலத்து அரசனான பிருகத்ரதன், தன் இரு மனைவியரிடமும் தனித்தனி பாகமாகப் பிறந்த ஆண்மகவை ஊரின்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

எல்லையில் வீசி எறிய, ஊரின் எல்லையில் வலம் வருபவளான சரை என்னும் அரக்கி அப்பாகங்களை எடுத்து இணைத்து சராசந்தன் எனும் பெயரிட்டு பிருகத்ரதனிடம் வளர்க்குமாறு கூறிச் சென்றதனை;

**...வியன்மாநகரின்புறத்தெறியப்**
**புரிசைவாயிற்கண்டவற்றைப்பசிப்பானெடுத்துப்பொரத்தினளாற்**
**றருமமுணராமனத்தியொருதசைவாயரக்கிசரையென்பாள் (வில். சபா. இராய., பா.35)**

எனும் சபா பருவ இராயசூயச் சருக்கப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. சரை நரமாமிசம் உண்ணும் அரக்கி என்பதனால் தாமதக் குணமுடையவளாகக் கருதப்படுகிறாள்.

**சுதேட்டிணை**

மச்சதேசத்து அரசனின் மனைவி. சுவேதன், உத்தரன், உத்தரை இம்மூவரையும் மக்களாகக் கொண்டவள். கணவரையும், மகன்களையும் பாண்டவர்களுக்காகப் போரில் இழந்தவள். கீசகன், உபகீசகர்களையும் உடன் பிறப்பாகக் கொண்டு அவர்களையும் வீமனால் இழந்தவள். இந்நிகழ்வுகள் நடந்த சூழலில் வாழ்ந்த சுதேட்டிணை இராசதக் குணமுடையவள் என்பதில் ஐயமில்லை.

**சுபத்திரை**

சுபத்திரை கிருட்டிணன் மற்றும் பலராமனுக்குத் தங்கையாவாள். அருச்சுனன் சுபத்திரையை மணக்கும் எண்ணம் கொண்ட கிருட்டிணனின் கட்டளைப்படி வதக மலையிலே மழைக் காலத்திலே செய்யப்படுகின்ற இந்திர பூசையைத் துவாரக மக்கள் செய்தனர். அங்கு யதுகுலத்தாரும், போசகுலத்தாரும் விழாவில் இன்புற்றிருக்க நறுமணமுள்ள மாலையணிந்த பலராமனும், தோழியர் சூழ அழகில் சிறந்த சுபத்திரையும் வருகை புரிந்தனர். அவ்விழாவில் முக்கோலும், கமண்டலமும், செங்கல் தூசும், முந்நூலும், சிதையும் பொருந்திய துறவு வேடம் பூண்ட சன்னியாசியான அருச்சுனனைக் கிருட்டிணன், பலராமன் மற்றும் அனைவரும் வணங்கினர். பின்பு கிருட்டிணன் சுபத்திரையைச் சன்னியாசியான அருச்சுனனுக்கு பணிவிடைகள் புரியுமாறு பணித்தான். சுபத்திரையும் அவ்வாறே சிறப்புடன் பணிவிடைப் புரிந்தாள். நாளடைவில் சுபத்திரை தன் கூர்மையான மதிநுட்பத்தால் அத்துறவி அருச்சுனன் என அறிந்து காதலும் கொண்டாள். பின்பு கிருட்டிணன், பலராமன் திருமண ஏற்பாடுகள் செய்ய இந்திரன், இந்திராணி, வசிட்டமுனி முதலிய முனிவர்களும் ஆபரணங்கள் மற்றும் வாழ்த்துக்கள் அளித்து திருமணத்தை நடத்தி வைத்தனர். அதன்பின் இருவருக்கும் ஓர் சுப தினத்தில் அபிமன்யு அவதரித்தான்.

அழகு நிறைந்த சுபத்திரை மதிநுட்பத்துடன் துறவியாய் இருப்பது அருச்சுனன் தான் என்று அறிந்தது, இந்திரன், வசிட்டமுனி உட்பட பல சான்றோர்கள் திருமணத்தின் போது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

வாழ்த்தியது, மாவீரனான அபிமன்யுவைப் பெற்றெடுத்த நிகழ்வுகள் அனைத்தும் சுபத்திரையின் சத்துவக் குணத்தினால் நிகழ்ந்தவையேயாகும்.

**திரௌபதி**

திரௌபதி பஞ்ச பாண்டவர்களின் பட்டதரசியாவாள். திரௌபதிக்கு இந்திரசேனை, பாஞ்சாலி, நளாயிணி, விரதசாரிணி, பதிவிரதை என பல பெயர்களுண்டு. திரௌபதி மாலையிட்டச் சருக்கத்தில் எழுபத்திமூன்றாம் பாடல் முதல் எண்பத்தேழாம் பாடல்கள் வரை திரௌபதியின் முற்பிறப்பு வரலாறு காணப்படுகிறது. அப்பிறப்பில் திரௌபதி கற்புநெறி தவறாது கணவன் மீது அன்பு கொண்ட நளாயிணியாகப் பிறந்து நற்கதி அடைந்துள்ளதை அறிய முடிகிறது. இப்பிறவியில் துருபதனின் அருளாலும் தவத்தின் மேன்மையாலும் திரௌபதி பிறந்ததை,

**மின்னுங்கொடியுநிகர்மருங்குல் வேய்த்தோண்முல்லைவெண்முறுவல்**
**பொன்னும்பிறந்தாள்கோகனகப் பூமீதெழுந்தபொன்போல்வாள்**

**(ஆதி. வாரணா., பா.90)**

எனும் ஆதிபருவ வாரணாவதச் சருக்கப்பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. அவள் பிறந்ததற்காக துருபதனும் மிகுந்த ஆனந்தம் அடைந்துள்ளான். வளர்ந்து மங்கையான போது தர்மதேவனின் புத்திரனான தருமனுக்கு மணமுடிக்கப்பட்டாள்.

**அச்சமும் நாணும் மடனும்முந் துறத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய (தொல். களா., நூ.1045)**

என்ற தொல்காப்பியர் கூறும் பெண்களின் பண்புகளை அணிகலனாகக் கொண்டவள் திரௌபதி. பெண்கள் உயிரைக் காட்டிலும் சிறந்ததாக நாணத்தையும், நாணத்தைக் காட்டிலும் சிறந்ததாகக் கற்பையும் மதித்தமைக்குத் திரௌபதியும் சான்றாவாள். அதை வலுப்படுத்தும் விதமாகச் சூது நடந்தபொழுது விதுரன், திரௌபதி மகா பதிவிரதை என்று கூறியதையும் கேட்காமல் துரியோதனன் எண்ணப்படி துச்சாதனன் திரௌபதியின் துகில் உரித்த பொழுது அவள் எம்பெருமானான கிருட்டிணனை வணங்க, அங்கு கிருட்டிணன் வந்து திரௌபதிக்கு அருள்புரிந்து மானத்தைக் காத்தார். அச்சமயம் சபையில் உள்ளோர் அவளுடைய அளப்பரிய ஆற்றலைக் கண்டு தெய்வமாக வணங்கி வாழ்த்தினர். பின்பு தீமை உருவாய் நின்ற அனைவரையும் அழித்தப்பின் தன் சிகை முடிப்பேன் என்று சபதமிட்டாள். மேலும், திரௌபதி கற்புநெறியினாலே தன் மானம் காத்துக் கொண்டதனால் கற்பிற்குத் தெய்வம் என்றும் போற்றப்படுகின்றாள்.

**பெண்களின் முக்கிய அம்சங்கள் 'சமர்ப்பணம், அடக்குதல், கீழ்ப்படிதல், மற்றும் உத்தமம்' ஆகியவற்றின் ஒரு வடிவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 'ஆண் லட்சியத்தின்'**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

**கருவியாக அவர்கள் கையாளப்பட்டு பயன்படுத்தப்பட்டனர். காந்தாரி, குந்தி, மற்றும் திரௌபதியும் கருத்தில் கொண்டால் ஆணாதிக்க உலகின் பெண்களாகவே காணப்படுகிறார்கள். (ஐகின்ஸ் அமோவா. "மகாபாரத காவியத்தில் ஆணாதிக்க சமூகம் மற்றும் பெண்களின் சக்தி பெண் உருவங்கள்")**

காந்தாரி, குந்தி மற்றும் திரௌபதி ஆகியோர் ஆணாதிக்க உலகின் பெண்களாகவே காணப்பட்டாலும் அவர்களின் எளிமைக்குணம் சத்தவக்குணத்தைப் பிரதிபலிக்கின்றன.

நாடுகரந்துறைச் சருக்கத்தில் பாண்டவர்கள் பன்னிரண்டாண்டு வனவாசம் சென்றபொழுது உடன் சென்ற திரௌபதி, காட்டினிற் கிடைத்த மலர் முதலிய உணவுகளை மனத்திருப்தியோடு உண்டு வருத்தமின்றி பன்னிரண்டு ஆண்டுகளை ஒரு நாளைக் கழிப்பது போன்று கழித்தமையை,

**அவரவெங்கொடியோனேவலின்படியே யைவருமா றிரண்டாண்டு**
**துருபதனளித்தபாவையுந்தா முஞ்சுருதிமாமுனிகணம்பலவும்**
**பரிவுடன்மலரும்பலங்களுங்கிழங்கும் பாசடைகளுமினிதருந்தி**
**ஒருபகல்போலக்கழித்தனரறிவு மொடுங்கியபுலன்களுமுடையோர் (வில். விராட., பா.2)**

எனும் வில்லிபாரதப் பாடல் வரிகள் இயம்புகின்றன. இது அவரின் எளிமையைக் குறிக்கும் விதமாய் உள்ளது.

திரௌபதி முற்பிறவியில் அன்புருவாயும் கற்புநெறியுடனும் திகழ்ந்தமை, யாகத்தின் மூலம் பிறந்தமை, சூது நடந்தபோது பொறுமைக் காத்தமை, துகில் உரிக்கப்படும் போது திரௌபதிக்கு கிருட்டிணன் மானம் காத்து அருளியமை, துரியோதனாதியர்களைத் தவிர அனைவரும் அவளின் கற்புநெறியே மானம் காத்தது என்று கைத்தொழுது வணங்கியமை, நியாயம் வேண்டி அவள் சாபமிட்டமைப, பாண்டவர்களுடன் வனவாசம் புகுந்தமைப் போன்ற இச்செய்திகள் அனைத்தும் திரௌபதி சத்துவக் குணம் உடையவள் என்பதற்கே சான்றாய் அமைகின்றன.

**துச்சளை**

துச்சளை திருதராட்டிரன்-காந்தாரியின் மகள். துரியோதனாதியர்களின் தங்கை. சயத்ரதனின் மனைவி. இதனால், அவள் இராசதக் குணமுடையவளாகிறாள்.

**தேவயானை**

தேவயானை சுக்கிராச்சாரியரின் மகள். யயாதியின் முதல் மனைவி. யது, துருவசு எனும் இரு புதல்வர்களைப் பெற்றெடுத்தவள். இதனால் இராசதக் குணமுடையவளாகிறாள்.

**நளாயணி**

திரௌபதி முற்பிறப்பில் நளாயணியாகப் பிறந்தவள். அந்தணர்களின் தலைவனான

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

மௌற்கலியனின் மனைவியாயினள். மனித வாழ்க்கை இல்வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு இயங்கக் கூடியது. நளாயணி ஒத்த அன்பு கொண்டும் நற்பண்பு கொண்டும் வாழ்ந்தவள்.

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். கற்., நூ.11)**

எனும் தொல்காப்பிய வரிகளுக்கேற்ப நளாயணி நற்பண்புகளுடன் இல்லறம் பேணி வந்தாள். அச்சமயம் மௌற்கலியன், அவளது கற்பின் உறுதியையும், அன்பின் நிலையையும் சோதிக்கக் கருதி, மிகுந்த தொழுநோயும், அதனால் சிதைந்த வடிவமும், துர்நாற்றமும் உடைய கிழவனாகவும், கோபமுடையவனாகவும் காட்டித் துன்புறுத்தினான். பலவாறு கொடுமைக்குள்ளான போதும் நளாயணி அன்பு பிறழாமல் உபசாரங்கள் செய்து நன்மனத்தோடு முறைப்படி அவன் உண்டு மிகுந்த எச்சில் உணவில் அவனுடைய கைவிரலொன்று விழுந்து கிடக்கக் கண்டும் சிறிதும் அருவருப்புக் கொள்ளாமல் அவ்வுணவை அன்போடு உண்டாள். இவ்வாறாக நளாயணி நிலைகுலையாமல் தன்னைப் பேணிப் பாதுகாத்து வழிபட்டு வந்ததைக் கண்டு திருப்திக் கொண்டு தனது பெருந்தவ வலிமையினால் நோயைப் போக்கி அழகில் சிறந்த கட்டழகு உடலை மௌற்கலியன் பெற்றார். இதை வில்லிபுத்தூரார் மன்மதனை எரித்த சிவன் பின்பு பார்வதியிடம் காதல் கொண்டு அவளைப் பிரியாதிருக்க இடப்பாகத்தை அளித்து அர்த்தநாரியாகத் தோற்றம் கொண்டதை ஒப்பிட்டுக் காட்டுகின்றார். அழகு உடல் பெற்ற பின்பு மௌற்கலியன், நளாயணியிடம் உனக்கு வேண்டும் வரம் கேட்க என்றதும் அவள், நின்னையேமென்றும் பிரியா நலன்நேர்கவென்றாள் என்று வேண்டினாள். கற்பு நெறி, பொறுமை, நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மானுட பண்புகளைக் கொண்டு திகழ்ந்த நளாயணி சத்துவக் குணத்தின் பண்புடையவளாகப் போற்றப்படுகிறாள்.

**பன்னவாதை**

பன்னவாதை வருணனின் மனைவி. சுதாயுவின் தாயானதால் இராசதக் குணமுடையவளாகிறாள்.

**மாத்திரி**

மாத்திரி மத்திர தேசத்து அரசனான ருதாயனனின் மகளாவாள். அவள் சல்லியனுக்கு தங்கையுமாவாள். பாண்டுவிற்கு மாத்திரியை வீடுமனே மணம் முடித்து வைத்தான். மாத்திரி பாண்டுவை மணந்து இளைய இராணியானாள். இருவீரர்களைப் பெற்றாள். பாண்டு மாத்திரியோடு இமயமலைக்குச் சென்றிருக்கையில் அங்கு மானுருவம் கொண்டு போகம்

E-ISSN: 2581-7140
Volume - 4, Special Issue - 2, June 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

கொண்டிருந்த கிந்தம முனிவனைத் தவறுதலாக மான் என்று கருதி பாண்டு அம்பெய்தி விட அச்சூழலில் கிந்தமனால், 'காமசுகத்தை எய்தினால் உயிர் இழந்துவிடுவாய்' என சாபம் பெற்றான். அச்சாபத்தை மறந்து பாண்டு மாத்திரியுடன் இன்பம் அனுபவித்து உயிர் சோர்ந்து விழுந்து இறந்தான்.

**முடலை விறகின் முளிஎரி பொத்தி**
**மிக்கஎன் கணவன் வனைப்பயன் உய்ப்பப்**
**புக்குழிப் புகுவேன் என்றுஅவள்புகுதலும் (மணி. ஆதிரை., பா.வ.25-27)**

மணிமேகலைக் காப்பியத்தில் தனது கணவன் சாதுவன் இறந்தான் என்று கேள்விப்பட்டதும் பிரிவுத் துயரைத் தாங்க முடியாமல் ஆதிரையும் தீயில் புக எண்ணியது போலவே வில்லிபாரதப் பெண்மாந்தர் மாத்திரியும் கணவனின் பிரிவைத் தாங்க முடியாமல் சிதையினில் தீயிற்குளித்திட்டாள். அதன் விளைவாக சொர்க்கம் புகுந்த செய்தியும் அறியப்படுகிறது. மாத்திரி கணவனுடன் துறவறம் சென்றமையால் சத்துவப்பண்புப் பெற்றும் பாண்டு இறந்த பொழுது அவனது உடலுடன் உடன்கட்டை ஏறியதனால் இராசதக் குணம் பெற்றும் திகழ்பவள் ஆகிறாள்.

**யோசனகந்தி**

யோசனகந்தி காளி எனும் பெயருடையவள். மீன் வயிற்றில் பிறந்து, வலைஞர் ஒருவரால் வளர்க்கப்பட்டு, சந்தனுவை மணந்து, சித்திராங்கதன் - விசித்திரவீரியன் எனும் இரு புதல்வர்களைப் பெற்றவள். இதனால் இராசதக் குணமுடையவள். மேற்கண்ட விதத்தில் வில்லிபாரதப் பெண்கள் தங்கள் குணநலன்களால் எவ்விதப் பண்புடையவர்கள் என்று ஆராயப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

காவியம் மனித வாழ்க்கைக்கு ஒரு நல்வழிகாட்டியாகும். தமிழ் இலக்கியத்தில் பாரதத்தின் பெருமையைப் போற்றும் முதல் காவிய நூல் வில்லிபாரதம். தமிழ்மொழி அழிந்து விடுமோ என்ற அச்சம் நிலவிய காலத்தில் தமிழ் அரசனான வரபதியாட்கொண்டான் மன்னனின் வேண்டுதலுக்கு இணங்கியும் சொற்சுவை, பொருட்சுவை விளங்க சீரிய நடையில் முதல் பத்துப் பருவங்களை எழுதிப் பின், அசுவத்தாமனின் அவலநிலை, பாண்டவர்களின் இறப்பு, கிருட்டிணனின் மறைவு ஆகியவற்றை விளக்கிப் பாடிட விரும்பாதக் காரணத்தினால் ஏனைய பருவங்களைப் பாடாமல் வில்லிபாரதத்தை வில்லிபுத்தூரார் பாடி முடித்துள்ளார் எனும் செய்தியும் இவ்வாராய்ச்சி கட்டுரை வழி அறியப்படுகிறது. திரௌபதிக்குத் தர்மம் நிலை நாட்டப்பட்டதை எடுத்தியம்புகின்ற வில்லிபாரதக் கதைப் போற்றுதலுக்குரியது. இச்சிறப்பிற்குரிய வில்லிபாரதத்தில் அசோதை, இராதை, கங்கையாள், காந்தாரி, கிருபி,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

குந்திதேவி, சுபத்திரை, திரௌபதி, நளாயணி போன்ற பெண்கள் தங்கள் செயல்களால் சத்துவப்பண்பு நிறைந்து காணப்பட்டனர் என்றும் அம்பை, அம்பிகை, அம்பாலிகை, உத்தரை, உருப்பசி, உலூபி, சுதேட்டிணை, துச்சளை, தேவயானை, பன்னவாதை, மாத்திரி, யோசனகந்தி போன்ற பெண்கள் அரசக்குல பெண்கள் என்பதாலும் அது சார்ந்த குணம் அமைந்ததினாலும் இராசதக் குணம் பெற்றவர்கள் என்றும் இராதை, இடிம்பை, காலகை, கிரிகை, சரை போன்ற பெண்கள் அரக்கர் குலத்தில் பிறந்ததினாலும் அவர்கள் செய்தக் கொடிய செயல்களை எடுத்துரைத்தும் தாமசக்குணமடையவர்கள் என்றும் ஆராய்ந்த விதம் இன்றைய ஆய்வாளர்கள் பலருக்கு இது சார்ந்த பல ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம் என்ற சிந்தனையைத் தூண்டும் விதத்தில் அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] வை.மு. கோபாலகிருசுணமாச்சாரியார் (உ.ஆ). *வில்லிபுத்தூரார் வில்லிபாரதம்.* உமா பதிப்பகம், சென்னை – 600001, 2013.

[2] சுவாமி. *மகாபாரத அரசியல்.* அநுராகம், சென்னை-600017, 2005.

[3] ந. சுப்புரெட்டியர். *பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு.* சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1982.

[4] சிங்கார வேலு முதலியார், ஆ. *அபிதான சிந்தாமணி.* தமிழ்க் கலைக்களஞ்சியம், கௌரா புத்தக மையம், திருச்சி.

[5] பாலூர் கண்ணப்ப முதலியார். *தமிழ் இலக்கிய அகராதி.* வானதி பதிப்பகம், சென்னை, 2010.

[6] தமிழண்ணல். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.

[7] சீத்தலைச்சாத்தனார். *மணிமேகலை.* தஞ்சாவூர் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

[8] தாம்சன், எம்.எஸ்.எச். "தமிழில் மகாபாரதம்." ஜர்னல் ஆஃப் தி ராயல் ஏசியாடிக் சொசைட்டி, தொகுதி. 92, எண். 3-4, 1960, பக். 115-123. https://doi.org/10.1017/S0035869X00163099 மார்ச் 15, 2022 அன்று அணுகப்பட்டது.

[9] தர்மபத ஜெனா. “மகாபாரதத்தை ஒரு அதிர்ச்சிக் கதையாகப் பேசுதல்.” ஆங்கில மொழி மற்றும் இலக்கிய ஆய்வுகளின் ஐரோப்பிய இதழ், தொகுதி.10, எண்.3, பக்.33-49, 2022. https://doi.org/10.37745/ejells.2013/vol10no3pp.33-50 மார்ச் 15, 2022 அன்று அணுகப்பட்டது.

[10] ஹெலன் செடர்மேன். "மகாபாரதத்தில் பெண்கள்." கேன்டர்பரி பல்கலைக்கழகத்தில் சமயப் படிப்பில் முதுகலை பட்டத்திற்கான தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை. 20 (19), 200 -210, 1987 https://clcpluggedin.wordpress.com/2020/04/24/ மார்ச் 15, 2022 அன்று அணுகப்பட்டது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 4, Special Issue - 2, June 2022 Available at: www.ijtlls.com

[11] சைதாலி வாத்வா. "மகாபாரதம்: இதிகாசத்தில் பெண் பாலின பாத்திரங்களின் பகுப்பாய்வு." 2020. https://clcpluggedin.wordpress.com/2020/04/24/ மார்ச் 15, 2022 அன்று அணுகப்பட்டது.

[12] ஐகின்ஸ் அமோவா. "மகாபாரத காவியத்தில் ஆணாதிக்க சமூகம் மற்றும் பெண்களின் சக்தி பெண் உருவங்கள்." பாஸ்டன் பல்கலைக்கழகம் 2020. https://www.academia.edu/en/45656597/ மார்ச் 15, 2022 அன்று அணுகப்பட்டது.

**References**

[1] V. M. Gopalakrishnanumachariyar. *Villiputhurar Villiparatham*. Uma Publishing, Chennai – 600001, 2013.
[2] Swami. *Mahabharata Arasiyal*. Anuragam, Chennai - 600017, 2005.
[3] N. Subbureddiyar. Panchali *Sabtham - oru Nooku. Sarvothaya Illakia Pannai*, Madurai, 1982.
[4] Chinkaravelu Muthaliyar, A. *Abithana chinthamani.* Tamil Kalaikalanchiyam, Gowara Puthaga Maiyam, Trichy.
[5] Balur Kannappa muthaliyar. *Tamil Ilakkiya Akarathi.* Vanathi Pathipagam, Chennai, 2010.
[6] Tamilannal. *Tholkapiyam Porulatigaram*. Manivasagar Publication, Chennai, 2009.
[7] Cheethalaichathanar. *Manimegalai.* Tamil University, Tanjavur.
[8] Thompson, M. S. H. "The Māhabhārata in Tamil." *Journal of the Royal Asiatic Society*, vol. 92, no. 3-4, 1960, pp. 115–123. https://doi.org/10.1017/S0035869X00163099 Accesed 15 March 2022.
[9] Dharmapada Jena. "Negotiating the Mahabharata as a Trauma Narrative." *European Journal of English Language and Literature Studies*, Vol.10, No.3, pp.33-49, 2022. https://doi.org/10.37745/ejells.2013/vol10no3pp.33-50 Accessed 15 March 2022.
[10] Helen Cederman. "Women in the Mahabharata." A thesis submitted in partial fulfillment of the requirements for the Degree of Master of Arts in Religious Studies in the University of Canterbury, 20 (19), 200 -210, 1987. (https://clcpluggedin.wordpress.com/2020/04/24/) Accessed on 15 March 2022.
[11] Chaitali Wadhwa. "The Mahabharata: An Analysis of Female Gender Roles in the Epic." 2020. https://clcpluggedin.wordpress.com/2020/04/24/ Accessed 15 March 2022.
[12] Aikins Amoah. "Patriarchal Society and the Power of Women female Figures in the Mahabharata Epic." Boston University 2020. https://www.academia.edu/en/45656597/ Accessed 15 March 2022.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.